## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 16/2018

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திருமதி. கீதா (ஜெராக்ஸ் ஆபரேட்டர்) உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உதயகுமார் | வயது | 25 |
| த.பெ.(அ)க.பெ. | வெள்ளையங்கிரி | தொழில் | பானிபூரிகடை |
| ஊர் | ஆண்டியப்பனூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

நான் ஆண்டியப்பனூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் பானிபூரிகடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் எனது பங்காளிகள். அ.சா.1 எனது சித்தப்பா. ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்குமிடையே நிலம் சம்மந்தமாக சிவில் பிரச்சனை இருந்துவருகிறது. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 5.00 மணிக்கு நிலத்தில் டிராக்டர் ஓட்டுவது சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. அவர்களுக்குள் அடித்துக் கொண்டார்கள். நான் சண்டை முடிந்தபின்பு தான் வந்து பார்த்தேன். என் சித்தப்பா அ.சா.1 மகேந்திரனுக்கு வலது பக்கம் கண்ணத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் அவரை மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தேன். யார் அடித்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும், எதனால் அடித்தார்கள் என்றும் எனக்கு தெரியவில்லை. போலீஸார் என்னை விசாரித்தனார்.

(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோாியதன் போில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

03.06.2017 அன்று மாலை 5.00 மணிக்கு எனது பாட்டி முனியம்மாள் சித்தப்பா பாப்பண்ணனும், சேர்ந்து ஆள் வைத்து டிராக்டர் முலம் நிலத்தை ஓட்டினார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் அதை நேரில் பார்க்கவில்லை. அவர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும். அவ்வாறு டிராக்டர் ஒட்டும் போது ஆஜர் எதிரிகள் அதனை தடுத்ததாக எனது பாட்டி முனியம்மாள் கூறினார். அதனை முன்விரோதமாக வைத்து அன்றைய தினம் இரவு ஆஜர் எதிரி எனது

பாட்டி வீட்டிடம் வந்து தகராறு செய்தார்கள் என்றால் சரிதான். அப்போது அ.சா.1 மகேந்திரனை 1ம் எதிரி மணி கட்டையால் தலையின் மீது அடித்துவிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணன் ராஜாவை மணியின் மகன் முருகேசன் செங்கல்லால் தாக்கினார் என்றால் சரிதான். 3ம் எதிரி சிவராஜ் கட்டையால் எனது அண்ணன் ராஜாவின் தலையின் மீது தாக்கினார் என்றால் அதனை நான் பார்க்கவில்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு நானும் எனது அண்ணி சம்பங்கியும் காயம்பட்ட எனது சித்தப்பா மகேந்திரனையும் எனது அண்ணன் ராஜாவையும் திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சையில் சேர்த்தோம் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரித்த போது மேற்கண்ட தகவல்களை நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

அ.சா. 1 மகேந்திரனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக முன்விரோதம் உண்டு என்றால் சரிதான். எனது பாட்டி முனியம்மாள், மகேந்திரன் வீட்டிற்கும், 1/2 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சண்டை இருதரப்பினருக்கும் எங்கு எங்கு நடந்தது என்று நேரடையாக தெரியாது என்றால் சரிதான். மகேந்திரனை மணி கட்டையால் அடித்ததாக கூறுவது பற்றி எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். ராஜாவை முருகேன் செங்கல்லால் தாக்கியதை நான் நேரடையாக பார்க்கவில்லைஎ ன்றால் சரிதான். சம்பவம் இருட்டில் நடந்தது என்றால் சரிதான். அதையும் நான் வேறு ஒருவர் சொல்லி கேள்விப்பட்டு தான் பார்த்தேன் என்றால் சரிதான். யார் யார் எங்கு எங்கு அடித்துக்கொண்டார்கள் என்று எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை